FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORMS

C 8319474

1. District : தென்காசி — மாவட்டம்
   Police Station : ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல்நிலையம்
   Year : 2026 — ஆண்டு
   FIR No. : 03/2026 — முதல் தகவல் எண்
   Date : 25.06.2026 — நாள்

2. (i) Act சட்டம்: PC Act 1988 (as amended in) Act 16 of 2018 — Sections பிரிவுகள்: 7 r/w
   (ii) Act சட்டம்: BNSS — Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்: 106
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : — குற்ற நிகழ்வு நாள்
   Date from : 24.06.2026 — நாள் முதல்
   Date to : 25.06.2026 — நாள் வரை
   Time Period : — நேர அளவு
   Time from : 08.00 hrs — நேரம் முதல்
   Time to : 07.45 hrs — நேரம் வரை
   (b) Information Received at PS. Date : 25.06.2026 — காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்
   Time : 15.00 hrs — நேரம்
   (c) General Diary Reference : Entry No(s) — பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்
   Time : — நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : எழுத்துமூலமாக
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: Transport Check Post, Puliyarai, 15 Km West.
   குற்ற நிகழ்விடம் அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
   Beat Number : — முதைக் காவல் எண்
   (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
   District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : K.அரவிந்த் — குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்
   (b) Father's/ Husband's Name : திரு.M.S.கண்ணன், — தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : 25.05.1982 — நாள் / பிறந்த ஆண்டு
   (d) Nationality : இந்தியன் — நாட்டினம்
   (e) Passport No. : — வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : — வழங்கப்பட்ட நாள்
   Place of Issue : — வழங்கப்பட்ட இடம்
   தூத்துக்குடி மாவட்ட காவல் அலுவலகம் வழங்கல்
   தாலுகா அலுவலகம் தென்காசி.
   (f) Occupation : — தொழில்
   (g) Address : முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / இயற்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   A-1 திரு.M.குமார், மோட்டார் வாகன ஆய்வாளர் (NT), புளியரை போக்குவரத்து துறை சோதனை சாவடி, தென்காசி மாவட்டம். A-2 திருமதி.S.கீதா, உதவியாளர், புளியரை போக்குவரத்து துறை சோதனை சாவடி, தென்காசி மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9 Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விபரம் (தேவைபெனில் தனித் தாளில் இணைக்கவும்)
No delay

10 Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11 Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12 FIR Contents (Attach separate sheet if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் (தேவைபெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. இன்று 25.06.2026-ம் தேதி பிற்பகல் 15.00 மணிக்கு துணை கண்காணிப்பாளர். ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு. தென்காசி M.பால் சுதர் ஆகிய நான் அலுவலக பொறுப்பில் இருக்கும்போது தென்காசி வட்டாட்சியர் அலுவலக குடிமைப்பொருள் வழங்கல் தனி வட்டாட்சியர் திரு.K.அரவிந்த் அவர்கள் நிலையம் ஆஜராகி ஒரு புகார் மனுவுடன் செயல்முறை நடவடிக்கை நாள் 25.06.2026-ம் இணைத்து நடவடிக்கை எடுக்க வேண்டி கொடுத்தார். அந்த மனு விபரம் பின்வருமாறு: அனுப்புநர் K.அரவிந்த். த/பெ M.S.கண்ணன். தனி வட்டாட்சியர், (குடிமைப்பொருள் வழங்கல்.) வட்டாட்சியர் அலுவலகம், தென்காசி. பெறுநர் துணை காவல் கண்காணிப்பாளர். ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு. தென்காசி மாவட்டம். அய்யா, பொருள்: தென்காசி மாவட்டம் - போக்குவரத்து துறை – புளியரை போக்குவரத்து துறை சோதனை சாவடியை 25.06.2026-ம் தேதி காலை திடீர் இணை ஆய்வு செய்தபோது கணக்கில் காட்டப்படாத மற்றும் சந்தேகத்திற்குரிய லஞ்சபணம் ரூ.1,95,150/- கைப்பற்றியது நடவடிக்கை எடுக்க வேண்டுவது தொடர்பாக. தென்காசி மாவட்டம் புளியரை போக்குவரத்து துறை சோதனை சாவடியை சேர்ந்த மோட்டார் வாகன ஆய்வாளர் (NT) மற்றும் அலுவலர்கள் கேரளாவிலிருந்து தமிழ்நாட்டிற்கு வரும் வாகனங்களையும்,

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லைவரம் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.

முதல் தகவல் அறிக்கை வாசகருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது

14 Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

25/6/2026

Signature of the Officer in Charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15 Date & Time of despatch to the court.
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

25.6.2026
17.00 Hrs

Name பெயர் M. PAULSUTHER.
Rank நிலை DSP. VIGILANCE. No. எண் Tenkasi.

தமிழ்நாட்டிலிருந்து கேரளாவிற்கு செல்லும் வாகனங்களையும் சோதனை செய்து, ஆவணங்களை சரிபார்த்து சீல் அடிப்பதற்கு லஞ்சம் வாங்கிக்கொண்டு ஆட்டோவில் ரயில் நிலையம் செல்வதாகவும், வழியிலும் சில புரோக்கர்களிடமிருந்து பணம் பெற்றுக்கொண்டு செல்வதாகவும் கிடைத்த தகவலின்பேரில் தென்காசி ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு அலுவலக வேண்டுகோளின்படி என்னுடைய தலைமையில் லஞ்ச ஒழிப்பு துறையினருடன் சேர்ந்து புளியரை போக்குவரத்து துறை சோதனை சாவடியை இன்று 25.06.2026-ம் தேதி காலை 06.20 மணியளவில் திடீர் தணிக்கை செய்ய சென்றபோது மேற்படி புளியரை வட்டார போக்குவரத்துத்துறை சோதனை சாவடி அலுவலகத்தில் பணியில் இருந்த மோட்டார் வாகன ஆய்வாளர் (NT) திரு.M.குமார் என்பவர் அவரது முதுகில் பேக் அணிந்து கொண்டு ஒரு ஆட்டோவில் ஏறி வேகமாக செங்கோட்டை ரயில்நிலையம் சென்றவரை புளியரை சோதனை சாவடிக்கு அழைத்து வந்து அவர் வைத்திருந்த டிராவல் பேக்கை சோதனை செய்தபோது அதில் 16 கத்தைகளாக தலா ரூ.10,000/- வீதம் ரூ.1,60,000/- கணக்கில் காட்டப்படாத பணம் இருந்தது. மேலும் சோதனை சாவடியில் பணியில் இருந்த உதவியாளர் திருமதி.கீதாவின் இருக்கைக்கு தென்புறம் இருந்த பிங்க் கலர் கைப்பையை சோதனை செய்தபோது அதில் ஏழு கத்தைகளாக ரூ.35,150/- கணக்கில் காட்டப்படாத பணம் இருந்தது. மேற்படி பணமானது புளியரை சோதனை சாவடியை கடக்கும் வாகனங்களின் ஆவணங்களில் சீல் அடிப்பதற்காக பெறப்பட்ட லஞ்சப்பணம் என்று மோட்டார் வாகன ஆய்வாளர் (NT) திரு.M.குமார் மற்றும் உதவியாளர் திருமதி.கீதா ஆகிய இருவரும் கூறியதால் இருவரிடம் இருந்தும் கணக்கில் காட்டப்படாத மொத்த பணம் ரூ.1,95,150/- கைப்பற்றப்பட்டது. இது தொடர்பாக செயல்முறை நடவடிக்கைகள் இன்று 25.06.2026-ம் தேதி காலை 08.00 மணி முதல் பகல் 12.45 மணி வரை தயார் செய்யப்பட்டது. மேற்படி செயல்முறை நடவடிக்கையை இத்துடன் இணைத்து மேற்படி பணம் கைப்பற்றப்பட்ட நபர்களான புளியறை போக்குவரத்து துறை சோதனை சாவடி மோட்டார் வாகன ஆய்வாளர் (NT) திரு.M.குமார் மற்றும் உதவியாளர் திருமதி.S.கீதா ஆகிய இருவர் மீதும் வழக்கு பதிவு செய்து மேல் நடவடிக்கை எடுக்க வேண்டி தங்களிடம் ஒப்படைக்கிறேன். Sd.25.06.2026. (K.ARAVIND) Spl.Tahsildar, Civil Supplies, Taluk office, Tenkasi, 9786172812. 25.06.2026-ம் தேதி புளியரை வட்டார போக்குவரத்து துறை சோதனை சாவடியை தென்காசி குடிமைப்பொருள் வழங்கல் தனி வட்டாட்சியர் திரு.K.அரவிந்த் அவர்கள் திடீர் ஆய்வு செய்தது சம்மந்தமான செயல்முறை நடவடிக்கைகள். முன்னிலை : திரு.K.அரவிந்த், தனி வட்டாட்சியர், குடிமைப்பொருள் வழங்கல், தென்காசி. திரு.M.பால் சுதர், காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, தென்காசி. நேற்று 24.06.2026-ம் தேதி மாலை

20.00 மணிக்கு தென்காசி மாவட்டம் புளியரை போக்குவரத்து துறை சோதனை சாவடி அலுவலர்கள் கேரளாவிலிருந்து தமிழ்நாட்டிற்கு வரும் வாகனங்களையும், தமிழ்நாட்டிலிருந்து கேரளாவிற்கு செல்லும் வாகனங்களையும் சோதனை செய்து, ஆவணங்களை சரிபார்த்து சீல் அடிப்பதற்கு லஞ்சம் வாங்கிக்கொண்டு ஆட்டோவில் ரயில் நிலையம் செல்வதாகவும், வழியிலும் சில புரோக்கர்களிடமிருந்து பணம் பெற்றுக்கொண்டு செல்வதாகவும் கிடைத்த தகவலின்பேரில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு ஆய்வுக்குழு அலுவலர் நியமிக்க வேண்டி கொடுத்த வேண்டுகோளுக்கிணங்க இன்று 25.06.2026-ம் தேதி காலை 05.30 மணிக்கு தென்காசி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜரான தென்காசி குடிமைப்பொருள் வழங்கல் தனி வட்டாட்சியர் திரு.K.அரவிந்த் அவர்களுடன் தென்காசி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் திரு.M.பால்சுதர் மற்றும் போலீஸ் பார்ட்டிகளுடன் அரசு வாகனம் TN 22 G 0995 மற்றும் இரு சக்கர வாகனங்களில் 05.45 மணிக்கு புறப்பட்டு காலை 06.20 மணிக்கு புளியரை NH-208 மதுரை முதல் கொல்லம் ரோட்டில் இடது பக்கம் வடக்கு நோக்கி அமைந்துள்ள மேற்படி புளியரை வட்டார போக்குவரத்துத்துறை சோதனை சாவடி அலுவலகத்திற்கு அருகே வந்து கண்காணித்தபோது மேற்படி சோதனை சாவடியில் இருந்து ஒருவர் முதுகில் பேக் அணிந்து கொண்டு ஒரு ஆட்டோவில் ஏறி வேகமாக புறப்பட்டு சென்றதை கவனித்த ஆய்வுக்குழுவினர் அந்த ஆட்டோவை பின்தொடர்ந்து சென்றபோது, மேற்படி ஆட்டோ செங்கோட்டை ரயில்நிலையம் சென்று அதன் பின் இருக்கையில் இருந்த நபர் வேகமாக இறங்கி இரயில்வே ஸ்டேசனுக்கு சென்றவரை செங்கோட்டை இரயில் நிலைய போர்டிகோ அருகில் வைத்து தடுத்து நிறுத்தி அவரைப்பற்றி விசாரித்தபோது, அவர் தன்னுடைய பெயர் திரு.M.குமார் என்றும், புளியரை போக்குவரத்து துறை சோதனை சாவடியில் மோட்டார் வாகன ஆய்வாளராக இருப்பதாகவும், இரண்டு நாள் அலுவல் முடித்து தர்மபுரி செல்ல வேண்டியிருப்பதால் மதுரைக்கு ரயிலில் செல்ல செங்கோட்டையில் இருந்து கிளம்பும் காலை 07.00 மணி மயிலாடுதுறை இரயிலை பிடிப்பதற்காக சோதனை சாவடி அலுவலில் இருந்து காலை 06.30 மணிக்கு கிளம்பி வந்ததாக தெரிவித்தார். அவரிடம் ஆய்வுக்குழுவினர் தங்களை அறிமுகப்படுத்திக்கொண்டு, அந்த இடமானது பொதுமக்கள் அதிகமாக கூடும் இடம் என்பதால் மேற்படி அரசு வாகனத்தில் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.குமாரை அழைத்துக்கொண்டு புளியறை போக்குவரத்து துறை சோதனை சாவடிக்கு வந்து காலை சுமார் 07.40 மணியளவில் சோதனை சாவடி அறைக்கு உள்ளே நுழைந்ததும் வலது பக்கம் செயலிடை மேடை உள்ளது. அதில் ஒரு நபர் ஆவணங்களை சரிபார்த்துக்கொண்டிருந்தார் அவரை விசாரித்தபோது அவர் தன்னுடைய பெயர் திருமதி.S.கீதா என்றும், உதவியாளராக பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார்.

அவரிடம் நாங்கள் எங்களை அறிமுகப்படுத்திக்கொண்டு, எங்களை சுயபரிசோதனை செய்த பின்னர், மோட்டார் வாகன ஆய்வாளரிடம் கணினியில் இன்றைய வசூல் குறித்து கேட்டபோது அவர் சோதனை சாவடியில் வாகனங்களுக்கு தண்டம் மற்றும் கட்டணம் ஆகியவை பணமாக வசூல் செய்யப்படுவதாக தெரிவித்தார்.

மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.குமாரிடம் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொல்ல அவரது வலது புற பேண்ட் பாக்கெட்டில் இருந்து ரூ.1,650/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். இது தொடர்பாக சோதனை சாவடியின் பணியாளர்கள் பணம் கையிருப்பு பதிவேட்டில் ஒப்பிட்டு பார்த்தபோது அதில் அவர் ரூ.4,300/- கையிருப்பு பணமாக குறிப்பிட்டிருந்தார். இது குறித்து அவரிடம் விசாரிக்க அவர் தான் செலவு செய்தது போக மீதி பணம் வைத்திருப்பதாக சொன்னால் ரூ.1,650/-ஐ திரும்ப அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.M.குமார் வைத்திருந்த புளு கலர் டிராவல் பேக்கை சோதனை செய்தபோது, அதில் Safari என குறிப்பிடப்பட்டிருந்தது. அதில் 4 அறைகள் கொண்டதாகவும், 4வது சிப் உள்ள பகுதியில் மடிக்கணினி வைப்பதற்கு என்று ஒரு பகுதி அமைக்கப்பட்டிருந்தது. Safari என குறிப்பிடப்பட்டிருந்த முதல் சிப்பை திறந்தபோது அதில் திரு.M.குமரின் ID.No.03/TN29/RTO/DPI/2020 என்ற அடையாள அட்டை இருந்தது. மேற்படி டிராவல் பேக்கின் 3வது சிப்பை திறந்து சோதனை செய்தபோது அதில் தலா ரூ.10,000/- வீதம் 9 பண்டில்களாக ரூ.90,000/- கீழ்கண்டவாறு பணம் இருந்தது.

Bundle-1	**Bundle-2**	**Bundle-3**
200 X 17 = 3,400 100 X 66 = 6,600 **Rs.10,000/-**	500 X 14 = 7,000 100 X 30 = 3,000 **Rs.10,000/-**	200 X 44 = 8,800 100 X 12 = 1,200 **Rs.10,000/-**
Bundle-4	**Bundle-5**	**Bundle-6**
500 X 1 = 500 200 X 27 = 5,400 100 X 41 = 4,100 **Rs.10,000/-**	500 X 1 = 500 200 X 16 = 3,200 100 X 63 = 6,300 **Rs.10,000/-**	200 X 23 = 4,600 100 X 54 = 5,400 **Rs.10,000/-**
Bundle-7	**Bundle-8**	**Bundle-9**
200 X 20 = 4,000 100 X 60 = 6,000 **Rs.10,000/-**	100 X 100 = 10,000 **Rs.10,000/-**	200 X 18 = 3,600 100 X 64 = 6,400 **Rs.10,000/-**

மேற்படி டிராவல் பேக்கின் 4வது சிப்பை திறந்து சோதனை செய்தபோது அதில் தலா ரூ.10,000/- வீதம் 7 பண்டில்களாக ரூ.70,000/- கீழ்கண்டவாறு இருந்தது.

Bundle-1	Bundle-2	Bundle-3	Bundle-4
500 X 2 = 1,000 200 X 25 = 5,000 100 X 40 = 4,000 **Rs.10,000/-**	200 X 29 = 5,800 100 X 42= 4,200 **Rs.10,000/-**	500 X 5 = 2,500 200 X 20 = 4,000 100 X 35 = 3,500 **Rs.10,000/-**	500 X 4 = 2,000 200 X15 = 3,000 100 X 50 = 5,000 **Rs.10,000/-**
Bundle-5	**Bundle-6**	**Bundle-7**	
500 X 3 = 1,500 200 X 11 = 2,200 100 X 63 = 6,300 **Rs.10,000/-**	500 X 3 = 1,500 200 X 10 = 2,000 100 X 65 = 6,500 **Rs.10,000/-**	500 X 2 = 1,000 200 X 13 = 2,600 100 X 64 = 6,400 **Rs.10,000/-**	----

மேற்படி பணம் பற்றி திரு.M.குமாரிடம் கேட்டபோது அவர் புளியரை சோதனை சாவடியில் நேற்று காலையில் இருந்து சோதனை சாவடியை கடக்கும் வாகனங்களில் இருந்து ஆவணங்களில் சீல் அடிப்பதற்காக பெறப்பட்ட லஞ்சப்பணம் என்று கூறியதால் மேற்படி பணம் ரூ.1,60,000/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

புளியரை சோதனை சாவடியை கடந்து செல்லும் வாகனங்களின் ஓட்டுநர் கொண்டுவந்து காண்பிக்கும் ஆவணங்களை மேற்படி கேபினில் இருந்து சரிபார்த்துக் கொண்டிருந்த உதவியாளர் திருமதி.கீதா இருக்கைக்கு தென்புறம் பிங்க் கலர் கைப்பை இருந்தது. அந்த கைப்பை குறித்து திருமதி.கீதாவிடம் கேட்டபோது அவர் அது தன்னுடைய கைப்பைதான் என்று தெரிவித்தார். மேற்படி கைப்பையை சோதனை செய்தபோது ஒரு சிப் கொண்டதாக இருந்தது. அந்த சிப்பை திறந்து பார்த்தபோது ஒரு சிறிய வெள்ளை துணியில் REI/30100651/O, 301055888001 எண் தைக்கப்பட்டு இருந்தது. கைப்பையில் கம்பெனி பெயர் எதுவும் இல்லாமல் இருந்தது. மேற்படி கைப்பயில் ஏழு கத்தைகளாக பணம் இருந்தது. அதனை எடுத்து எண்ணிப்பார்த்தபோது முதல் கத்தையில் ரூ.5000/- (500X2=1,000, 200X8=1,600, 100X24=2,400) ம், இரண்டாவது கத்தையில் ரூ.3,000/- (500X1=500, 200X4=800, 100X17=1,700)ம், மூன்றாவது கத்தையில் ரூ.10,000/- (500X3=1,500, 200X19=3,800, 100X47=4,700)ம், நான்காவது கத்தையில் ரூ.2,150/- (500X1=500, 100X6=600, 50X21=1050)ம், ஐந்தாவது கத்தையில் ரூ.10,000/- (500X3=1,500, 200X17=3,400, 100X51=5,100)ம், ஆறாவது

கத்தையில் ரூ.1,500/- (500X1=500, 200X4=800, 100X2=200)ம், ஏழாவது கத்தையில் ரூ.3,500/- (500X1=500, 200X6=1,200, 100X12=1,200, 50X12=600)ம் இருந்தது. மேற்படி பணம் பற்றி திருமதி.கீதாவிடம் கேட்டபோது அவர் புளியரை சோதனை சாவடியை கடக்கும் வாகனங்களின் ஆவணங்களில் சீல் அடிப்பதற்காக பெறப்பட்ட லஞ்சப்பணம் என்று கூறியதால் மேற்படி பணம் ரூ.35,150/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்படி கைப்பையின் உள்பக்கத்தில் இருந்த ஒரு சிப் போட்ட பகுதியில் உதவியாளர் திருமதி.கீதாவின் அடையாள அடையுடன் கத்தையாக பணம் ரூ.2,230/-ம் இருந்தது. மேற்படி பணம் பற்றி திருமதி.கீதாவிடம் கேட்டபோது, அவர் தனது சொந்த செலவுக்காக வைத்திருப்பதாக சொன்னார். சோதனை சாவடியின் பணம் கையிருப்பு பதிவேடு 2026ல் சரிபார்த்தபோது அவருடைய கணக்கில் ரூ.2,300/- காண்பிக்கப்பட்டிருந்தது. இது குறித்து கேட்டபோது திருமதி.கீதா செலவு போக மீதி பணம் வைத்திருப்பதாக சொன்னதால் மேற்படி பணம் ரூ.2,230/-ம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

மேற்படி செயலிடை மேடைக்கு தென்புறத்தில் உள்ள கணினி அறையை சோதனை செய்தபோது அதில் கண்காணிப்பு கேமராவின் டிவி உள்ளது. மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.குமாரின் மேஜையின் தென்புறத்தில் உள்ள அறையை சோதனை செய்தபோது, அறையின் வடமேற்கு மூலையில் உள்ள இரும்பு பீரோ காணப்பட்டது. இரும்பு பீரோவில் ஒரு ஸ்டீல் பாக்சில் ரூ.19,194/- இருந்தது. மேற்படி பணம் குறித்து மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.குமாரிடம் கேட்டபோது நேற்றைய தேதியில் வாகனங்களுக்கு சாலைவரி, பசுமை வரி, கட்டணம் மற்றும் பிற கட்டணங்களாக வசூல் செய்ததாக தெரிவித்தார். மேற்படி பணத்தை சோதனை சாவடியின் பணப்பதிவேட்டோடு சரிபார்த்ததில் சரியாக இருந்ததால் மேற்படி பணம் ரூ.19,194/-ஐ திரு.குமாரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேற்படி இரும்பு பீரோவில் கணினி சம்மந்தமான பொருட்களும், பழைய பதிவேடுகளும் காணப்பட்டது. அதன் தென்புறத்தில் இன்வெர்ட்டர் பேட்டரியும், சிறிய பூஜை அறையும் இருந்தது. மேற்படி அறையின் தென்புறத்தில் உள்ள அறையில் இருபுறத்திலும் உள்ள சிமிண்ட் ரேக்குகளில் பழைய ஆவணங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தது.

மேற்படி அறையின் கீழ்புறத்தில் சமையல் அறையும், அதன் கீழ்புறம் கழிவறையும் அதனையடுத்து பெரிய ஹாலும் உள்ளது. சோதனை சாவடியின் மெயின் வாசலுக்கு மேல்புறம் மாடிக்கு செல்லும் படிக்கட்டுகள் உள்ளது. மாடியில் பெரிய ஹாலும், கழிப்பறையும் உள்ளது. மேற்படி அறைகளில் எந்த பொருட்களும் காணப்படவில்லை. மேற்படி திடீர் சோதனை நடந்து கொண்டிருக்கும்போது காலை சுமார் 08.45 மணியளவில் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.K.வீரபுத்திரன் என்பவர்

சோதனை சாவடி பணிக்காக வந்தார். மேலும் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.K.வீரபுத்திரன் ஆஜர் செய்த புளியரை சோதனை சாவடி 1) ஆக்கைகள் பதிவேடு 2026, 2). பணியாளர்கள் பணம் கையிருப்பு பதிவேடு 2026, 3) பணப்பதிவேடு 05.06.2026 முதல் 4) புளியரை பருவைப்பதிவேடு 2026, 5) புளியரை சோதனை சாவடி வருவைப்பதிவேடு 2026, 6) தாமத வருவைப்பதிவேடு 2026, 7) அனுமதி வருவை பதிவேடு 2026 ஆகிய பதிவேடுகள் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் உதவியாளர் திருமதி.கீதா கணினியில் இருந்து User Wise Transaction details from 24.06.2026 to 25.06.2026 User name: 124089 (Rs.19,194) டவுன்லோடு செய்து கொடுத்ததையும் மற்றும் POS (Point of Sale) மெஷினில் தனக்கு User ID மற்றும் Password தவறுதலாக உள்ளதால் அதை தான் உபயோகப்படுத்தவில்லை என்று மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.குமார் தெரிவித்தார். தென்காசி குடிமைப்பொருள் வழங்கல் தனி வட்டாட்சியர் முன்னிலையில் மோட்டார் வாகன ஆய்வாளர் (NT) திரு.குமார் மற்றும் உதவியாளர் திருமதி.கீதா ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

இன்று 25.06.2026-ம் தேதி புளியரை போக்குவரத்து துறை சோதனை சாவடியில் திடீர் ஆய்வு மேற்கொண்டபோது கண்டுபிடிக்கபட்ட கணக்கில் காட்டப்படாத பணம் மொத்தம் ரூ.1,95,150/- கேரளாவிலிருந்து தமிழ்நாட்டிற்கு வரும் வாகன ஓட்டுனர்கள் மற்றும் தமிழ்நாட்டிலிருந்து கேரளாவிற்கு செல்லும் வாகன ஓட்டுனர்களிடமிருந்து புளியரை சோதனை சாவடிக்கு பணி ஒதுக்கப்பட்ட மோட்டார் வாகன ஆய்வாளர் (NT) திரு.M.குமார் மற்றும் உதவியாளர் திருமதி.S.கீதா ஆகிய இருவரும் கையூட்டாக பணம் பெற்றிருக்கலாம் என சந்தேகத்தின் அடிப்படையில் கைப்பற்றப்பட்டது. இந்த செயல்முறை நடவடிக்கைகள் இன்று (25.06.2026) காலை 08.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு பகல் 12.45 மணிக்கு முடிக்கப்பட்டது. ஒப்பம். K.அரவிந்த், தனி வட்டாட்சியர், குடிமைப்பொருள் வழங்கல், வட்டாட்சியர் அலுவலகம், தென்காசி, ஒம்.மற்றும் சிலர்.

Sir, Received the complaint on 25.06.2026 at 15.00 hrs and registered a case in Tenkasi V&AC, Cr.No.03/2026 u/s 7 of PC Act 1988 (as amended in) Act 16 of 2018 r/w 106 BNSS on 25.06.2026 at 16.00 hrs Sd.M.Paul Suther, 25.06.2026 DSP, V&AC, Tenkasi.

The original complaint, Proceedings dated 25.06.2026 of Special Tahsildar, Civil Supply, Tenkasi and original FIR were sent to the Hon'ble Principal District Sessions Judge Tenkasi and copies sent to concerned higher officials.

25/6/2026

M.PAULSUTHER
DSP. V&AC, Tenkasi